



கழக தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், சென்னை வடக்கு திட்ட மின் கழக தொ.மு.ச. தேர்தலில் மூன்றாவது முறையாக சென்னை வடக்கு திட்டச் செயலாளராக வெற்றி பெற்ற மாநிலத் தலைவர் கே.சசிகுமார் தலைமையில் புதிய நிர்வாகிகள் – திட்டத் தலைவர் எம்.நாகராஜ், திட்ட பொருளாளர் டி.அருள் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றனர். முத்தமிழ் அறிஞர் கலைஞர், மு.க.ஸ்டாலின் ஆகியோரின் கழக ஆட்சிகாலங்களில் மின் தொ.மு.ச. வாரிய தொழிலாளர்களுக்கு வழங்கிய சலுகைகள் மற்றும் சாதனைகள் அடங்கிய புத்தகத்தை கழகத் தலைவர் அவர்களிடம் வழங்கி, அதனை மகிழ்ச்சியுடன் பெற்று வெளியீடு செய்தார்கள்.

### கர்நாடக தி.மு.க. இலக்கிய அணி சார்பில்

# துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ நூல் அறிமுக விழா!

## பெங்களூருவில் நவ.9ல் நடைபெறுகிறது!

பெங்களூரு, நவ.7-

கர்நாடக மாநில திமுக இலக்கிய அணி சார்பில், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் எழுதிய ‘அவரும் நானும்’ என்ற நூல் அறிமுக விழா பெங்களூருவில் நவம்பர் 9ம் தேதி காலை 10 மணிக்கு குயின்ஸ் ரோட்டில் உள்ள இந்திய வேளாண்மை கழகம் அரங்கத்தில் நடைபெறுகிறது.

கர்நாடக மாநில தமிழ் பத்திரிக்கையாளர்கள் சங்கத் தலைவர் முத்துமணி நன்னன் வரவேற்புரை ஆற்றுகிறார். கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி தலைவர் போர் முரசு கதிரவன் தலைமை தாங்குகிறார்.

கர்நாடக மாநில தி.மு.க. நிர்வாகிகள் இலக்கிய அணி இளைஞரணி, மகளிர் அணி, தொ.மு.ச. நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர் டாக்டர் ஜெயராஜமூர்த்தி நூல் அறிமுகம் செய்து வாழ்த்துரை வழங்குகிறார்.

தலைமை இலக்கிய அணி பொருளாளர் நாகை சந்திரபாபு பாரதி. ஆர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விழா மேடையில் சிறப்பு நூலை பெறுபவர்கள் மதுசூதன் பாபு (லிட்டில் பிளவர் பள்ளி, செங்கம்) வ.முருகன் தொழிலதிபர் (வி ஸ்கொயர் வணிக வளாகம்,) ஹரி கிருஷ்ணன் கேஎஸ் ஆர்டிசி, கார்த்திக், இலக்கியா (தாளாளர் சிகரம் மெட்ரிகுலேஷன் செங்கம்,) கிரி, திருப்பத்தூர் எஸ்.ராஜேந்திரன் எஸ். பிரான்சிஸ் ஷமீன் சுலைமான் ஆகியோர் நூல்களை பெற்றுக் கொள்கின்றனர்.

தங்க தங்கவயல் கரிகாலன் நன்றி கூறுகிறார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (6.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவையின் நிறுவனத் தலைவர் தனியரசு அவர்கள் சந்தித்து பேசினார்.

### SIR பணிகளில் குழப்பம்! கணக்கீட்டுப் படிவங்கள் கூட வழங்கப்படவில்லை!

# SIR - ஐ எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்று தி.மு.க.வுக்குத் தெரியும்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ, எம்.பி. – செய்தியாளர்களுக்குப் பேட்டி!

சென்னை, நவ.7-

SIR பணிகளில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் குறித்து கழக சட்டத் துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் (05.11.2025) செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

இது வருமாறு :-

பீகாரை அடுத்து இரண்டாம் கட்டமாக 12 மாநிலங்கள் மற்றும் சில யூனியன் பிரதேசங்களில் இந்தச் சிறப்புத் தீவிரத் திருத்த நடவடிக்கை நடக்கிறது. இது பல குழப்பங்களை விளைவிக்கும் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலிலிருந்தே கூறி வந்ததாகவும், இதன் விளைவாக பல லட்சக்கணக்கான வாக்குகள் நீக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் என்.ஆர். இளங்கோ தெரிவித்தார்.

**உச்ச நீதிமன்றத்தில் வழக்கு**

இந்த எஸ்ஐஆர் நடவடிக்கை குறித்து, இந்தியா கூட்டணியின் அனைத்து கட்சித் தலைவர்களுடனும் ஆலோசனை செய்து, பிறகு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கட்சிகளையும் அழைத்து ஆலோசனை செய்து, அதன் பெயரில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வழக்கு வருகின்ற வெள்ளிக்கிழமை அல்லது திங்கள்கிழமை விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

**நடைமுறை சிக்கல்கள் மற்றும் குழப்பங்கள்**

எஸ்ஐஆர் பணிகள் துவங்கிய நிலையில் அதில் பல குழப்பங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கின்றன. பெரும்பாலான இடங்களில், பிஎல்ஓக்கள் என அழைக்கப்படும் அதிகாரிகள் நேற்று எந்த இடத்திற்கும் வந்து கணக்கீடு படிவங்களைத் தரவில்லை. அதிகாரிகளை விசாரித்தால், தங்களுக்கு படிவங்கள் வந்து சேரவில்லை என்று காரணம் கூறுகிறார்கள். 30 நாட்களில் ஒரு நாள் படிவங்கள் வழங்கப்படாமலே போய்விட்டது.

கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஓரிரு தொகுதிகளில் பிஎல்ஓக்கள் படிவங்களைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, மறுநாளே பூர்த்தி செய்துத்தர வேண்டும் என்று கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். தேர்தல் ஆணையத்தின் 27/10/25 அறிவிப்பின்படி, கணக்கீட்டுப் படிவங்களைக் கொடுத்து மீண்டும் பெறுவதற்கு ஒரு மாத அவகாசம் வழங்கப்பட்டிருக்கும் நிலையில், மறுநாளே படிவங்களைத் திருப்பித் தரக் கேட்பது சட்டத்தின் அடிப்படையிலானது அல்ல.

தேர்தல் ஆணையம் எஸ்ஐஆர்க்காக தேர்ந்தெடுத்த காலம் மிகவும் உசிதமற்றது, நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு காலமாக அமைந்துள்ளது; நவம்பர் 4ஆம் தேதியிலிருந்து டிசம்பர் 4ஆம் தேதி வரை படிவங்களை கொடுத்து திரும்ப வாங்கக்கூடிய காலத்தில், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை அதிகமாக இருக்கும் என்றும், அத்துடன் இது



நெல் அறுவடை காலமும் ஆகும்.

விவசாயிகள் நிலத்தில் உழைக்க வேண்டிய காலத்தில் இந்தப் பணி மிகுந்த சிரமத்துக்குள்ளான காலம். மேலும், பிப்ரவரி 2026 வரை நடக்கவிருக்கும் இந்தப் பணிகளுக்கு இடையில் கிறிஸ்மஸ், பொங்கல் பண்டிகைகள் வருகின்றன. இவற்றை தேர்தல் ஆணையம் கணக்கில் கொள்ளவில்லை, இக்காலங்களில் ஊழியர்களாக இருக்கட்டும் வாக்காளர்களாக இருக்கட்டும், களத்தில் இருந்து பணிகளைச் செய்ய முடியாது என்பதை தேர்தல் ஆணையம் அறிந்திருக்க வேண்டும்.

**பீகார் முன்மாதிரியும் குளறுபடிகளும்**

ஏற்கனவே பீகாரில் நடத்தப்பட்ட சிறப்புத் தீவிரத் திருத்தத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த பிறகும் கூட, ஏறக்குறைய 65 லட்சம் வாக்காளர்களை எந்தவித விசாரணையும் இல்லாமல் நீக்கி, குளறுபடியான வாக்காளர் பட்டியலைத் தந்திருக்கிறார்கள். பீகார் மாநிலத்தில் 33 லட்சம் வாக்காளர்கள் நிரந்தரமாக குடி பெயர்ந்து போய்விட்டார்கள் என்று காரணம் கூறப்பட்டது.

கடந்த 24/06/2025 அன்றைய பீகாருக்கான அறிவிப்பை விட, தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அறிவிப்பு மிகவும் மோசமானதாக இருப்பதால் தான் திமுக உச்ச நீதிமன்றத்தை நாடியுள்ளது. பீகாரில் கணக்கீடு படிவத்தோடு சேர்த்து ஆவணங்களைத் தர வேண்டும், ஆனால் தமிழ்நாட்டில் படிவத்தை மட்டும் பூர்த்தி செய்து கொடுத்தால் போதும். படிவத்தைப் பூர்த்தி செய்து தரவில்லை என்றால், 30 ஆவது நாள் முடிந்த பிறகு அவர்கள் வாக்காளராக இருக்க மாட்டார்கள், புதிதாக படிவம் 6இல் (Form 6) வாக்காளராக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்க வேண்டும்.

**வாக்காளர் பட்டியல் சரிபார்த்தலில் சவால்**

தற்போதைய நடைமுறையின் கீழ், ஒவ்வொரு வாக்காளரும் தங்களுடைய 2002 மற்றும் 2005 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலைக் கொண்டு, அந்த விவரங்களைக் கணக்கீட்டுப் படிவத்தில் பூர்த்தி செய்து தர வேண்டும். 2002க்கு பிறகு வெளியிடப்பட்ட அனைத்து வாக்காளர்கள் பட்டியலும் செல்லுபடி தன்மை அற்றதாக ஆகிவிட்டது.

2002/2005 பட்டியல்களைத் தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில் இருந்து பெறுவதில் பெரும் சிக்கல்கள் உள்ளன. இந்த பழைய வாக்காளர் பட்டியல்கள் முழுமையான விவரங்களைத் தாங்கியதாக இல்லை. வீதியின் பெயர், பாகத்தின் பெயர் தெளிவாக இல்லை, வாக்காளர் பெயர் மட்டுமே பட்டியலாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரே பெயரில் பல வாக்காளர்கள் இருக்க வாய்ப்புள்ளதால், ஒவ்வொரு வாக்காளரும் தங்களுடைய வாக்கை அடையாளம் காணவும், கணக்கீடு படிவத்தைப் பூர்த்தி செய்யவும், கணினியைப் பற்றி தெரிந்திருந்தால்கூட, அரை மணி நேரம் முதல் ஒரு மணி நேரம் வரை செலவழிக்க நேரிடும். சரியான விவரங்களைப் பூர்த்தி செய்யாவிட்டால், வரைவு வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் வராது.

**சட்டமீறல்களும் 13வது ஆவணமும்**

தேர்தல் ஆணையத்தின் இந்த அறிவிப்பில் விதி மீறல்களும் சட்ட மீறல்களும் உள்ளன.

குறிப்பாக, அடையாள ஆவணங்கள் குறித்த 13வது விதி குறித்து அவர் அதிர்ச்சி தெரிவித்தார். பீகாரில் நடந்த எஸ்ஐஆருக்குப் பிறகு வெளியிடப்பட்ட 1/7/2025 தேதியிட்ட வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால், அதை ஒரு அடையாள ஆவணமாகக் காட்டி, தமிழ்நாட்டில் அல்லது 12 மாநிலங்களில் வாக்காளர் ஆகலாம் என்று கூறியிருப்பது பெரிய குழப்பத்தை விளைவிக்கும்.

ஒருவர் ஒரு இடத்தில் ‘சாதாரணமாக குடியிருப்பவராக’ இருந்தால் மட்டுமே அவருக்கு வாக்குரிமை கிடைக்கும் என்று சட்டம் கூறுகிறது. ஒரு மனிதர் ஜூலை 1, 2025 அன்று பீகாரின் சாதாரணமாக குடியிருப்பவர் என்று தேர்தல் ஆணையம் சொல்லிய பிறகு, நான்கைந்து மாதங்களில் அவர் வேறு மாநிலத்தில் எப்படி வாக்காளர் ஆக முடியும்? தகுதியற்ற வாக்காளர்களைச் சேர்ப்பது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல்.

**தயார்நிலையில் தி.மு.க.**

“தவிர்க்க இயலாத சூழ்நிலையில் இந்த எஸ்ஐஆரை எதிர்கொள்ள வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என்பதை குறித்துக் கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக தமிழ்நாடு முழுவதும் ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்களையும், மாவட்டச் செயலாளர்களையும் ஒருங்கிணைத்து, பிஎல்ஏ 2 க்களுக்கு உரிய பயிற்சியை நாங்கள் கட்சி சார்பாகச் செய்திருக்கிறோம்”.

கழகத் தலைவர் அறிவுறுத்தலின் பேரில், வாக்காளர்களின் வாக்குகளைப் பாதுகாப்பதற்கு உறுதுணையாக இருப்பதற்காகத் தலைமை கழகத்தில் எட்டு வழக்கறிஞர்களையும், விளையாட்டு அணியைச் சேர்ந்த கௌதமன் அவர்களையும், தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்த ஒருவரையும் நியமித்து ஒரு அணியைத் துவங்கி இருக்கிறோம்.

“எந்த ஒரு தகுதியுள்ள வாக்காளரும் நீக்கப்படக் கூடாது, எந்த ஒரு தகுதியற்ற வாக்காளரும் சேர்க்கப்படக் கூடாது என்பதே எங்களுடைய கோரிக்கை”

அதிமுகவின் நிலைப்பாடு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, ’ஜனநாயகத்தில் நம்பிக்கை இல்லாத அதிமுகவினர் ஆதரிக்கத்தான் செய்வார்கள்’ என்று பதிலளித்தார்.

இவ்வாறு அவர் கூறினார்.



கழகத்தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மனோஜ் பாண்டியன், அமைச்சர் பி.கே.சேகர்பாபுவுடன், நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. யை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜெண்ட் (BDA) ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் கலந்து கொண்டு (SIR) பணிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கினார்.